**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 213/2026 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 2 |
| Name | : | ரென்சி, வயது 40 |
| Father Name/Husband Name | : | ரமேஷ் |
| Village | : | கரடிகுளம் |
| Taluk | : | கயத்தார் |
| Calling | : | கூலி வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd
day of July 2026.

**(Accused present).**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கரடிகுளத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது மச்சான். இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு வழங்கப்பட்டு பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

2. கடந்த 22.03.2026 ஆம் தேதி 20.30 மணியளவில் நானும், எனது கணவரும் சத்தமாக வீட்டில் பேசி கொண்டிருக்கும்போது அங்கு வந்த ஆஜர் எதிரி மற்றும் அவரது மனைவி எங்களை பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டி, ஆஜர் எதிரி அ.சா.1 யை கன்னத்திலும், முதுகிலும் மாறி மாறி கையால் அடித்தாகவும், எனது மகள் ரூபாவை பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து ஆஜர் எதிரி தகாத வார்த்தைகளால் திட்டி தலை முடியை இழுத்து கீழே தள்ளி காலால் வயிற்றிலும், மார்பிலும் மிதித்து காயத்தை ஏற்படுத்தியதாகவும், ஆஜர் எதிரி எங்களுக்கு கொலைமிரட்டல் விடுத்ததாகவும், இந்த சம்பவம் குறித்து அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது நீதிமன்றத்திற்கு வெளியே ஆஜர் எதிரியிடம் சமாதானம் ஆகிவிட்டதாலும் ஆஜர் எதிரி எனது

மச்சான் என்பதாலும் அவருக்கு ஆதரவாக அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியம் சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A,M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.